**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) - 2023**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 5788–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் திருத்திய நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு திருத்தப்பட்ட கூறு 02 இற்கான நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண வீதி அதிகாரசபைகள் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. செயற்திட்டக் காலப்பகுதி 2024 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | தேசிய செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் குறைந்தபட்சம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்களே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டுக் குழுக்கள் முறையாக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 ஒப்பந்தப் பொதிகள் தொடர்பாக ரூபா 43.2 மில்லியனிற்கு மதிப்பிடப்பட்ட 121 பணிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன, 108 மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளுக்கு, ரூபா 129.96 மில்லியனால் மதிப்பிடப்பட்ட தொகையை விட செய்யப்பட்ட வேலையின் பெறுமதி குறைவாக இருந்தது, 04 பொதிகளின் 117 பணிகளுக்கு ரூபா 218.4 மில்லியனால் மதிப்பிடப்பட்ட தொகைகளை விஞ்சியிருந்ததுடன் ரூபா 53.4 மில்லியன் முன்பு மதிப்பிடப்படாத 03 பொதிகளில் அணைக்கட்டு நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆலோசகர்களின் கடமைகள் சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் தொடக்கத்தில் ஒரு தோராயமான மதிப்பீடு (வடிவமைப்பு இல்லாமல்) தயாரிக்கப்பட்டு கேள்விகளை கோருவதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர், சரியான பெறுமதிகள் இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் திருத்தப்படுகின்றன. முதலில் அவசியமான தேவைகளை வடிவமைத்து இனங்காண்பதன் மூலம் வீதி மதிப்பீடு செய்யப்பட்டால் இந்த வேறுபாடுகளை மிகக் குறைந்த அளவில் வைத்திருக்க முடியும். எனினும் அதற்கான தகுதிவாய்ந்த அதிகாரிகள் மாகாண வீதி அதிகாரசபைகள்/ திணைக்களங்களில் இல்லாததால், ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர், | வேறுபாடுகள் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் அதிகப்படியான சுமையை குறைக்கும் வகையில் பெறுகை வழிகாட்டலில் குறிப்பிட்ட தேவைப்பாட்டை செயற்திட்டம் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரர் மற்றும் பொறியியலாளர் ஆகியோரின் அதிகாரிகள் குழு இந்த வடிவமைப்பு மற்றும் மதிப்பீட்டு செயன்முறையில் ஈடுபட்டு, அதற்கான மதிப்பீடுகள் அந்த நேரத்தில் தயாரிக்கப்படும்.<br><br>தொடக்கத்தில் ABC இடுதல் மதிப்பிடப்படவில்லை, ஆனால் வீதியின் பணி தொடங்கிய பின்னர் (மதிப்பீட்டிற்கு சில ஆண்டுகளுக்குப் பின்னர்), வீதியின் மேற்பரப்பு மிகவும் பலவீனமாக இருப்பது கண்டறியப்பட்டது, எனவே முழு வீதியும் ABC ஆல் மூடப்பட வேண்டியதுடன் அதன் பிரகாரம் வீதி ஓரங்கள் மற்றும் தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும். இதனால், கொடுப்பனவு தொகைகள் அதிகரித்தது. | |
| (ஆ) | BOQ இல் உள்ள ஒவ்வொரு உருப்படிக்கும் சமர்ப்பிக்கப்பட்ட அலகு ஒன்றின் விலையானது போக்குவரத்துச் செலவையும் உள்ளடக்கியிருக்க வேண்டிய போதிலும் NWP 03 பொதியில் போக்குவரத்துச் செலவாக ஒப்பந்ததாரருக்கு ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் அது விலை வேறுபாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டது. | ஆரம்பத்தில் இந்த இரண்டு வீதிகளிலும் முழு ABC ஐ பயன்படுத்த முடிவு செய்யப்படவில்லை, பின்னர் வீதி மேற்பரப்பில் உள்ள பலவீனம் காரணமாக ஒப்பந்தம் வழங்கப்பட்டது; முழு ABC ஐ பயன்படுத்தி வீதியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், பொருட்களின் அளவு மாறியிருந்தது. | -மேற்படி- |
| (இ) | செயற்திட்டத்தின் ஒப்பந்தங்களில் உள்ள அளவு மற்றும் விலை வேறுபாடுகள் காரணமாக, 10 சதவீத நிகழத்தக்கவைகளின் ஏற்பாட்டு பெறுமதியை விஞ்சி 03 ஒப்பந்தப் பொதிகளான NWP 02, NWP 03 மற்றும் WP 01 தொடர்பான ஒப்பந்த பெறுமதியின் 13.7, 14.8 மற்றும் 15.5 சதவீதமாக வேறுபாட்டு கட்டளைகள் வழங்கப்பட்டன. பெறுகை வழிகாட்டல்களின் 8.13.4 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளரால் வேறுபாடுகளை விளக்கும் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீத நிகழத்தக்கவைகளின் ஏற்பாட்டு எல்லைக்கு அப்பால் 15 | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வீதிகளின் அபிவிருத்தியில் அடிக்கடி வேறுபாடுகள் ஏற்படுகின்றதுடன் பொருளாதார மந்தநிலை காரணமாக கடந்த காலங்களில் விலை நிகழத்தக்கவைகளில் பெரிய அதிகரிப்பு இருந்தது. எனவே, அந்த அதிகரிப்புகள் ஒன்றாகப் பதிவு செய்யப்பட்டு, ஒரே நேரத்தில் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டன, இது பின்பற்றப்பட்ட முறையாகும். | வேறுபாடுகள் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் அதிகப்படியான சுமையை குறைக்கும் வகையில் பெறுகை வழிகாட்டலில் குறிப்பிட்ட தேவைப்பாட்டை செயற்திட்டம் பின்பற்ற வேண்டும். |

சதவீத எல்லை வரையிலான வேறுபாட்டு கட்டளைகளை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் அங்கீகரிக்கலாம். மேலும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் அவர்களால் திருப்தி அடையவில்லை என்றால், தொழில்நுட்பக் குழு மற்றும் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் வேறுபாட்டு கட்டளைகளை அங்கீகரிக்கலாம். எனினும், அதற்கு மாறாக, வேறுபாட்டு கட்டளைகள் வழங்கப்பட்ட பின்னர், பெறுகைக் குழுவின் பரிந்துரைகளும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தன.

## 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக போதுமான உள்ளக கணக்காய்வு செயன்முறை மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வு நடைபெற்று வருகிறது. | உள்ளக கணக்காய்வு சரியாக செயற்பட வேண்டும். |